ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

අංක 11,614 — 1958 දෙසැම්බර් 12 වැනි සිකුරාදා — 12.12.1958

11,614 ம் இலக்கம் — 1958 ம் ஆண்டு மார்கழி மாதம் 12 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி IV — உள்ளூர் ஆட்சி

## அறிவித்தல்கள்

### 1939 ம் ஆண்டின் 61 ம் இலக்க நகர சங்கங்கள் சட்டம்

1958 ம் ஆண்டு நவம்பர் மாதம் 21 ந் திகதி வெளியான அரசாங்க வர்த்தமானியின் 4 ம் பாகத்தில் 1958 ம் ஆண்டு டிசெம்பர் மாதம் 1 ந் திகதி முதல் திரு. பீ. கே. திசநாயகா விசேஷ அதிகாரியாக இருந்து வெலிகமை பட்டணத்தின் காரியங்களைப் பரிபாலிப்பார் என இருக்கும் விளம்பரம் இத்தால் நீக்கப்படுகின்றது.

ஈ. எல். டயஸ் அபயசிங்க,
பதில் உள்ளூராட்சி அதிகாரி.

கொழும்பு,
1958 ம் ஆண்டு நவம்பர்மீ 3 ந் உ.

---

### 1952 ம் ஆண்டின் 6 ம் இலக்க உள்ளூர் அதிகாரத்தாபனங்கள் (பிரமாண உபவிதிகள்) சட்டம்

1952 ம் ஆண்டின் 6 ம் இலக்க உள்ளூர் அதிகாரத் தாபனங்கள் (பிரமாண உபவிதிகள்) சட்டத்தின் 3 ம் பிரிவின்படி மட்டக்களப்பு மாவட்டத்து எருவூர் வடக்கு கிராமப் பகுதியின் கிராமச் சங்கத்தால் நிறைவேற்றப்பட்ட கீழ்க்காணும் தீர்மானம் அப்பிரிவின் தாற்பரியப்படி பிரசுரிக்கப்படுகின்றது.

#### தீர்மானம்

உள்ளூராட்சி அமைச்சரால் ஆக்கப்பட்டு, "செனற்" சபையாலும் சனப்பிரதிநிதிகள் சபையாலும் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தால் அங்கீகரிக்கப்பட்டதென 1953 ம் ஆண்டு ஒகஸ்ற் மாதம் 7 ந் திகதி வெளியான 10,560 ம் இலக்க "கெசெற்" றில் அறிவிக்கப்பட்ட பிரமாண உபவிதிகளின் 1 முதல் 37 ஈருகவுள்ள பாகங்களை, இத்தீர்மானம் "கெசெற்" றில் பிரசுரிக்கப்படும் திகதியிலிருந்து ஏற்றுக்கொள்ளுவதென்று எருவூர் வடக்கு கிராமச் சங்கம், 1952 ம் ஆண்டின் 6 ம் இலக்க உள்ளூர் அதிகாரத் தாபனங்கள் (பிரமாண உபவிதிகள்) சட்டத்தின் 3 ம் பிரிவின் (1) ம் உட்பிரிவின்படி இத்தால் தீர்மானிக்கின்றது.

பொ. மாணிக்கவாசகர்,
கிராமச் சங்கத் தலைவர்.

எருவூர் வடக்கு,
1958 ம் ஆண்டு எப்ரில்மீ 10 ந் உ.

---

## உபவிதிகள்

L. G. D.—GC. 14/48.

### கிராம சமுதாயச் சட்டம்

கிராம சமுதாயச் சட்டத்தின் (அத்தியாயம் 198) 49 ம் பிரிவின்படி புத்தளம் மாவட்டத்திலுள்ள புத்தளம் பற்றுக் கிராமப் பகுதியின் கிராமச் சங்கம் உண்டாக்கியதும் 1947 ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 24 ந் திகதி வெளியான 9,773 ம் இலக்க விசேஷ "கெசெற்" றில் பிரசுரிக்கப்பட்ட பிரகடனத்தால் திருத்தப்பட்ட அப்பிரிவு தம்மீது வைத்த தத்துவங்களின் பலத்தைக் கொண்டு உள்ளூராட்சி, கலாசார விவகார அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்டதுமான உபவிதிகள்.

நிரந்தரச் செயலாளர்,
உள்ளூராட்சி, கலாசார விவகார அமைச்சு.

கொழும்பு,
1958 ம் ஆண்டு நவம்பர்மீ 27 ந் உ.

#### உபவிதிகள்

##### வாகன, மிருக வரி

1. (1) சட்டத்தின் 47 ம் பிரிவின்படி திரட்டும் வாகன, மிருக வரியின் பொருட்டு, அந்த வரிக்குப் பாத்திரமான வாகனம் அல்லது மிருகம் எதையும் தமது சொந்தத்தில், பாதுகாப்பில் அல்லது ஆதிக்கத்தில் வைத்திருக்கும் ஒவ்வொருவரும் இதன் "அ" அட்டவணையில் காட்டப்பட்டுள்ளதும் சங்கக் கந்தோரில் பெற்றுக்கொள்ளக்கூடியதுமான பத்திரத்தின் மாதிரியில் ஒரு விபரஅட்டவணையை தலைவரிடம் கொடுக்க வேண்டும்.

(2) சட்டத்தின் 47 ம் பிரிவின்படி வரி செலுத்தப் பாத்திரப்பட்டவர், 1959 ம் ஆண்டுக்கான அட்டவணையை எழுதி நிரப்பி 1959 ம் ஆண்டு ஜனவரி மாதம் பதினைந்தாம் திகதிக்கு முன்னர் தலைவருக்கு அனுப்ப வேண்டும். அவர் அந்த வாகனத்தை அல்லது மிருகத்தை தமது சொந்தத்தில், பாதுகாப்பில் அல்லது ஆதிக்கத்தில் வைத்திருக்கும் மேல்வரும் எவ்வருடத்துக்கும் அத்தகைய அட்டவணை சமர்ப்பிக்கும்படி கேட்கப்படமாட்டார்.

2. சட்டத்தின் 47 (2) ம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய 1 ம் உபவிதியில் சொல்லப்படும் அட்டவணைப் பத்திரம் சமர்ப்பிக்கும் ஒவ்வொருவரும் வேறு அறிவித்தலின்றி—

(அ) 1959 ம் வருடத்துக்குரிய அட்டவணைப் பத்திரத்தில் சொல்லப்படும் வாகனங்களுக்கும் மிருகங்களுக்கும், அவ்வருடத்து மார்ச் மாதம் முப்பத்தோராந் திகதிக்கு முன்னர் வரி கொடுக்கவும் ;

(ஆ) மேல் வரும் ஒவ்வொரு வருடத்துக்கும் அட்டவணைப் பத்திரத்தில் சொல்லப்படும் வாகனங்கள், மிருகங்களில் மேல் வரும் அவ்வருடத்தில் முப்பது நாட்களுக்கு மேல் தமது சொந்தத்தில், பாதுகாப்பில் அல்லது ஆதிக்கத்தில் இருக்கும் வாகனங்கள் மிருகங்களுக்கு அவ்வருடத்து மார்ச் மாதம் முப்பத்தோராந் திகதிக்கு முன்னர் வரிகொடுக்கவும் பாத்திரராவார்.

3. மேலே 1 ம் உபவிதியில் சொல்லப்படும் அட்டவணைப் பத்திரத்தைச் சமர்ப்பித்த எவரேனும் அந்த அட்டவணைப் பத்திரத்தில் சொல்லப்படாததும் சட்டப்படி வரி செலுத்துவதற்குப் பாத்திரமானதுமான வாகனம் அல்லது மிருகம் எதையும் வாங்கினால், வைத்திருந்தால் அல்லது உபயோகித்தால் அல்லது 1 ம் உபவிதியின்படியான அட்டவணைப் பத்திரம் எதுவும் சமர்ப்பிக்காத எவரும் முதல் முறையாக அவ்வரிக்குப் பாத்திரமான வாகனம் அல்லது மிருகம் எதையும் வாங்கினால், வைத்திருந்தால் அல்லது உபயோகித்தால் அந்த வாகனத்தை அல்லது மிருகத்தை வாங்கிய அல்லது வைத்திருக்க வேனும் அல்லது உபயோகிக்கவேனும் தொடங்கிய திகதியிலிருந்து ஒரு மாதத்துக்குள் அவ்விதம் வாங்கியதை, வைத்திருப்பதை அல்லது உபயோகிப்பதைக் குறித்துத் தலைவருக்கு எழுத்துமூலமான ஒரு அறிவித்தல் அனுப்பி இதன் "அ" அட்டவணையில் காணப்படும் பத்திரத்தின் மாதிரியில் எழுத்து மூலமான வேறு விபர அறிக்கையையும் உடனே சமர்ப்பிக்க வேண்டும்.

4. சட்டத்தின் 47 (2) ம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய, மேலே 3 ம் உபவிதியில் சொல்லப்படும் அறிக்கையைச் சமர்ப்பித்த ஒவ்வொருவரும் அவ்வறிக்கை எவ்வருடத்தில் கொடுக்கப்பட்டதோ அவ்வருடத்துக்கும் அடுத்துவரும் ஒவ்வொரு வருடத்துக்கும் அந்த அறிக்கையில் காட்டப்பட்டுள்ள, அவருடைய சொந்தத்தில், பாதுகாப்பில் அல்லது ஆதிக்கத்தில் இருக்கும் வாகனங்களுக்கும் மிருகங்களுக்கும் தலைவரால் அவருக்கு அதன் பொருட்டு அறிவிக்கப்படும் காலத்துக்குள் வரி செலுத்தப் பாத்திரராவார்.

5. (1) மேலே 1 ம் உபவிதியில் சொல்லப்படும் அட்டவணைப் பத்திரத்தை அல்லது 3 ம் உபவிதியில் சொல்லப்படும் அறிக்கையைக் கொடுத்த பின்னர், அந்த அட்டவணைப் பத்திரத்தில் அல்லது அறிக்கையில் சொல்லப்பட்டுள்ள வாகனம் அல்லது மிருகம் எதற்கும் வரி

செலுத்தும் பாத்தியதையிலிருந்து தவிர்த்துவிடும்படி சட்டத்தின் 47 (3) ம் பிரிவின் கீழ் கோரும் ஒவ்வொருவரும் அவ்விதம் கோருவதற்கான காரணங்களைக் காட்டி அங்ஙனம் தவிர்த்து விடுவதற்கான தமது கோரிக்கையை தலைவருக்கு எழுத்தில் அறிவிக்க வேண்டும்.

(2) 1 ம் உபவிதியில் சொல்லப்படும் அட்டவணைப் பத்திரத்தை அல்லது 3 ம் உபவிதியில் சொல்லப்படும் அறிக்கையைச் சமர்ப்பித்த பின்னர் எந்த வாகனத்தையேனும் அல்லது மிருகத்தையேனும் ஆட்சிபண்ணுமல், வைத்திருக்காமல் அல்லது உபயோகிக்காமல் விடும் ஒவ்வொருவரும், அந்த வாகனத்தை அல்லது மிருகத்தை தாம் ஆட்சி பண்ணுமல், வைத்திருக்காமல் அல்லது உபயோகிக்காமல் விட்டுவிட்டதை தலைவருக்கு எழுத்தில் அறிவிக்க வேண்டும்.

6. (1) எவரேனும் வரி கொடுத்ததும், வரி கொடுக்கப்பட்ட ஒவ்வொரு வாகனத்துக்கும் இதன் " ஆ " அட்டவணையில் காட்டப்பட்டுள்ள வாகனங்களைப் பேதப்படுத்திக்காட்டும் எழுத்துக்களில் அந்தந்த வாகனத்துக் கேற்ற எழுத்துக்களையும், அது எந்த வருடத்துக்கு வழங்கப்படுகின்றதோ அந்த வருடத்தைக் குறிக்கும் இலக்கங்களையும் வாகன இடாப்பிலுள்ள அந்த வாகனத்தின் இலக்கத்தையும் கொண்ட உலோகத் தகடு ஒன்றைத் தலைவர் வழங்க வேண்டும்.

(2) இந்த உபவிதியின் (1) ம் பந்தியின்படி வழங்கப்பட்ட தகடு எதுவும் பாவிப்பினுல் அல்லது வேறுவகையில் தெளிவாகத் தெரியாது போனுல் அல்லது உருவழிந்து போனுல் அதன் சொந்தக்காரர் தலைவரிடம் அதைத் திருப்பிக் கொடுத்து ஐம்பது சதமும் செலுத்தினுல் புதிதாக ஓர் உலோகத் தகட்டைப் பெற்றுக் கொள்ளும் உரித்துடையவராவார்.

7. ஒவ்வொரு வாகனத்தினதும் சொந்தக்காரர் அல்லது ஒவ்வொரு வாகனத்துக்கும் பொறுப்பாளியாக இருப்பவர் 6 ம் உபவிதியின்படி அந்த வாகனத்துக்குக் கொடுக்கப்பட்ட தகட்டை அந்த வாகனத்தின் துலக்கமான ஓர் பாகத்தில் மாட்டி வைக்க வேண்டும்.

8. எதேனுமொரு தெரு அல்லது பாதை வழியாகச் சென்று கொண்டிருக்கும் எந்த வாகனத்தையும், அந்த வாகனத்தில் மாட்டி வைக்க வேண்டுமென்று 7 ம் உபவிதியால் வேண்டப்படும் உலோகத் தகட்டைப் பார்வையிடுதற் பொருட்டு தலைவரேனும் அல்லது தலைவரால் எழுத்தில் அதிகாரமளிக்கப்பட்ட வேறு எவரேனும் நிறுத்துவதும் மறித்து வைப்பதும் நீதியாகும். அந்த வாகனத்தின் சாரதி அல்லது பொறுப்பாளி, அவ்விதம் கேட்கப்படுங்கால், அந்த வாகனத்தை நிறுத்தி தலைவரை அல்லது தலைவரின் அதிகாரம் பெற்ற வேறு ஆளை அத்தகட்டைப் பார்வையிட அனுமதிக்க வேண்டும்.

9. இந்த உபவிதிகளில் :—

" தலைவர் " என்பது சங்கத் தலைவர் எனவும்,

" சங்கம் " என்பது புத்தளம் மாவட்டத்து புத்தளம் பற்றுக் கிராமப் பகுதியின் கிராமச் சங்கம் எனவும்,

" சட்டம் " என்பது கிராம சமுதாயச் சட்டம் (அத்தியாயம் 198) எனவும் பொருள்படும்.

10. புத்தளம் மாவட்டத்திலுள்ள புத்தளம் பற்றுக் கிராமச் சங்கத்தால் ஆக்கப்பட்டு, 1941 ம் ஆண்டு ஜுலை மாதம் 18 ந் திகதி வெளியான 8,765 ம் இலக்க " கெசெற் " றில் பிரசுரிக்கப்பட்ட வாகன, மிருக வரி பற்றிய உபவிதிகள் இத்தால் நீக்கப்படுகின்றன.

" அ " அட்டவணை

பத்திரம்

இலக்கம் : ————.

வட்டார இலக்கம் : ————.

புத்தளம் பற்றுக் கிராமப் பகுதியின் கிராமச் சங்கம் வாகன, மிருக வரி பற்றிய உபவிதிகளின் தாற்பரியப்படி கொடுக்க வேண்டிய வாகனங்களின் அல்லது மிருகங்களின் அல்லது வாகனங்களினதும் மிருகங்களினதும் விவர அறிக்கை

சொந்தக்காரரின் பெயர் : ————.

விலாசம் : ————.

கிராமம் : ————.

| வாகனங்களின் அல்லது மிருகங்களின் அல்லது வாகனங்களினதும் மிருகங்களினதும் விபரங்கள் | எண்ணிக்கை (சொல்லில்) | குறிப்புகள் (துவிச்சக்கர வண்டிகளாயின் உற்பத்தியாளரின் இலக்கம் தருக) |
|---|---|---|
| பார வண்டிகள், பிரயாண வண்டிகள் அல்லது றிக்ஷோக்கள் தவிர்ந்த சகல இன வண்டிகளும் .. | .......... | .......... |
| சகல இன இரட்டைமாட்டுப் பாரவண்டிகள் அல்லது பிரயாண வண்டிகள் .. | .......... | .......... |
| சகல இன ஒற்றைமாட்டுப் பாரவண்டிகள் அல்லது பிரயாண வண்டிகள் .. | .......... | .......... |
| றிக்ஷோக்கள் .. .. | .......... | .......... |
| கைவண்டிகள் .. .. | .......... | .......... |
| துவிச்சக்கர வண்டிகள் .. | .......... | .......... |
| யானைகள் .. .. | .......... | .......... |
| குதிரைகள் .. .. | .......... | .......... |
| கழுதைகள் .. .. | .......... | .......... |
| கோவேறு கழுதைகள் .. | .......... | .......... |

நானறிந்த அளவில் மேலே தரப்பட்டுள்ள விபரங்கள் உண்மையானவை என்று உறுதிப்படுத்துகிறேன்.

————,
சொந்தக்காரரின் கையொப்பம்.

திகதி : ————.

" ஆ " அட்டவணை

| | |
|---|---|
| பாரவண்டி, பிரயாண வண்டி அல்லது றிக்ஷோ தவிர்ந்த சகல இன வண்டி ஒவ்வொன்றுக்கும் .. | PU.P.C. |
| இரட்டை மாட்டுப் பாரவண்டி அல்லது பிரயாண வண்டி ஒவ்வொன்றுக்கும் .. .. .. | PU.P.D. |
| ஒற்றைமாட்டுப் பாரவண்டி அல்லது பிரயாண வண்டி ஒவ்வொன்றுக்கும் .. .. .. | PU.P.S. |
| றிக்ஷோ ஒவ்வொன்றுக்கும் .. .. | PU.P.R. |
| கைவண்டி ஒவ்வொன்றுக்கும் .. .. | PU.P.H. |
| துவிச்சக்கர வண்டி ஒவ்வொன்றுக்கும் .. .. | PU.P.B. |

## விளம்பரம்

1958 ம் ஆண்டு மார்கழி (டிசெம்பர்) மாதம் 25 ந் திகதி வியாழக்கிழமை அரசாங்க விடுமுறைநாளாக இருப்பதால், 1958 ம் ஆண்டு மார்கழி (டிசெம்பர்) மாதம் 26 ந் திகதி வெளிவரவிருக்கும் இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்படவேண்டிய சகல விளம்பரங்களும் அறிவித்தல்களும் 1958 ம் ஆண்டு மார்கழி (டிசெம்பர்) மாதம் 22 ந் திகதி திங்கட்கிழமை பி. ப. 4 மணிக்கு முன்னர் அரசாங்க அச்சகத்திற்கு வந்து சேரவேண்டுமென இத்தால் தெரிவிக்கப்படுகின்றது.

பேர்னுர்ட் த சில்வா,
அரசாங்க அச்சகத் தலைவர்.

அரசாங்க அச்சகம்,
கொழும்பு,
1958 ம் ஆண்டு மார்கழி (டிசெம்பர்) மீ 6 ந் உ.

இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது.